# பூமியில் இருந்து வெளிவந்த யோகேஸ்வரி என்ற காளிதேவி

சாந்திப்பிரியா

(இதுவரை எந்த இதழிலும் வெளியாகாத கதை இது)



பெங்களூரில் உள்ள பல அற்புதமான ஆலயங்கள் குறித்து உள்ளூரிலேயே பலருக்கும் தெரியவில்லை என்பது வியப்பாக இருக்கின்றது. அந்த ஆலயங்கள் மிகப் பழமையானவை. அவற்றில் ஒன்றே அல்சூர் பகுதியில் உள்ள தேவி காளி அம்மன் ஆலயம். பூமியில் புதைந்து உள்ள தேவியின் முகம் மட்டுமே வெளியில் தெரிகின்ற அந்த ஆலயத்தின் வரலாறுதான் என்ன ?

1500 வருடங்கள் முன்பு ஒரு துறவி காளியைக் குறித்துத் தவம் இருந்து வந்தார். அன்ன ஆகாரம் எதுவும் இன்றி பல காலம் தியானித்தவர் முன் காளி தேவி தோன்றி அவருக்கு என்ன வேண்டும் என்று கேட்டாள். அவரோ தனக்கு காளி தேவியே வேண்டும் என்றும் தன்னுடன் அவள் என்றும் இருக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் வைத்தார். காளிதேவியும் அவருடைய பக்தியை மெச்சி அவருக்கு யோகேஸ்வரி என்று பெயரிட்டு ஒன்பது அங்குல உயர ஒரு சிலையைத் தந்துவிட்டு அதை பூஜிக்குமாறு கூறி மறைந்தாள். அந்த துறவியும்

பல காலம் அதை பூஜித்து வந்தப் பின் தனக்கு ஒரு திறமையான வாரிசோ, சிஷ்யனோ கிடைக்கவில்லை என்பதினால் பின்னர் பிறக்க இருக்கும் சத்யுகத்தில் அவள் பூமியில் அவதரிக்க வேண்டும் என்ற வேண்டுகோளுடன் அந்த சிலையை பூமியில் புதைத்து விட்டு சமாதி எய்தினார்.

1974 ஆம் ஆண்டு சத்யுகம் வந்தது. அந்த சிலை புதைந்து இருந்த இடம் கேழ்வரகு பயிரிடப்படும் இடமாகும். ஒரு நாள் விவசாயி ஒருவர் அந்த நிலத்தை உழுது கொண்டு இருந்த பொழுது அவருடைய கலப்பை அந்த சிலை மீது பட்டு கலப்பை மேலும் நகராமல் நின்றுவிட்டது. மிகவும் சிரமப்பட்டு அந்தக் கலப்பையை எடுத்தவர் பூமியில் இருந்து இரத்தம் பீய்ச்சி அடிப்பதைக் கண்டார். ஊரார் வந்து அந்த இடத்தை சோதனை செய்ய அங்கு வந்த லீலாதேவி என்ற இளம் பெண்ணுக்கு வந்த சாமி மூலம் அது காளிதேவியின் அவதாரமான யோகேஸ்வரி எனத் தெரிந்தது. அதை பத்திரமாக வெளியில் எடுத்து மக்கள் பூஜைகள் செய்யத் துவங்கினர். அதை வெளியில் எடுத்த பொழுது அதன் உயரம் சுமார் 16 அங்குலம் இருந்ததாக தெரிகின்றது.

சிறிய அறை ஒன்றில் வைக்கப்பட்டு ஸ்தாபனம் செய்யப்பட்ட அந்த சிலைக்கு அபிஷேகம், பூஜைகள் என நடந்து வந்தன. பலிகளும் தரப்பட்டு வந்தன. இந்த நிலையில் 1980 ஆம் ஆண்டு திருப்போரூர் மௌன ஸ்வாமிகள் அந்த இடத்திற்கு வந்து காளிதேவியின் மகிமைகள் அனைத்தையும் உணர்ந்தார். அவர் அங்கு தங்கி இருந்து ஒன்பது நாட்கள் நவராத்தரி பூஜைகள் செய்த பின் பலி தருவதை நிறுத்தி விடும்படி அறிவுறைக் கூறினார். அது மட்டும் அல்ல மூலஸ்தானத்தில் நுழை வாசலில் இருந்து ஒரு அடி துாரத்தில் அமைந்து இருந்த தேவியிடம் அத்தனை விசாலமான இடம் இருக்கும் பொழுது ஏன் முன்புறமாக அமர்ந்து உள்ளாய். சிறிது பின் தள்ளி அமரக் கூடாதா என மனம் உருகி பிரார்தனை செய்தார். என்ன அதிசயம் பத்தாவது நாளான விஜயதசமியன்று கதவைத் திறந்து பார்த்தால் அங்கிருந்த சிலை பின் பகுதிக்கு நகர்ந்து இருந்தது தெரிந்தது. அனைவரும் காளியின் அற்புதத்தைப் பார்த்து அதிசயித்து நின்றனர். தலை மட்டுமே பூமியின் வெளியில் தெரிகின்ற தேவியின் கூந்தல் சுற்றிலும் பரப்பி விடப்பட்டு உள்ளது அதிசயமான காட்சி ஆகும்.

இந்த காளி மற்ற கோவில்களைப் போல இல்லாமல் மாறுதலாக மேற்கு திசை நோக்கி அமர்ந்து உள்ளாள். . ஆகவே சூரியன் உதிக்கும் மேற்கு திசை நோக்கி நின்றபடி பிரார்த்தனை செய்தால் அனைத்து பிரார்த்தனைகளும்

நிறைவேறுகின்றன என்பது ஐதீகம். ஞாயிற்றுக் கிழமைகளில் இராகு கால பூஜைகள் நடை பெறுகின்றன. ஆண்டுதோறும் நவராத்திரி விழா, சண்டி விழா போன்றவையும் நடைபெறுகின்றன. பங்குனி மாதம் அன்று உத்திர நட்சத்திரத்தில் நடைபெறும் கல்யாண உற்சவத்தில் தேவிக்கு மாங்கல்யம் செலுத்தினால் கணவனின் ஆயுள் நீண்டு இருக்கும் என்ற நம்பிக்கையும் உள்ளது.